**செய்தி வெளியீடு எண்:292** **நாள் :15.06.2016**

**மக்களின் ஏகோபித்த வரவேற்பை பெற்ற இந்தியாவின் முன்னோடித் திட்டமான "அம்மா ஆரோக்கிய திட்டத்தை"மேலும் முனைப்புடன் செயல்படுத்தி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசிற்கு நற்பெயரை ஈட்டித்தர வேண்டும்!**

**மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் வேண்டுகோள்!**

அம்மா ஆரோக்கிய திட்டத்தை செயல்படுத்தும் மாவட்ட அலுவலர்களுக்கான மாநில அளவிலான ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தலைமையில் இன்று (15.06.2016) சென்னை தலைமைச் செயலக மக்கள் நல்வாழ்த் துறை கூட்டரங்கில் நடைபெற்றது.

இத்திட்டம் குறித்த கையேட்டினை வெளியிடடு பேசிய மாண்புமிகு அமைச்சர்,

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் கடந்த 25.08.2015 அன்று தமிழக சட்டப் பேரவையில், எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு முன்னோடித் திட்டமாக """"**அம்மா ஆரோக்கிய திட்டம்**"" அறிவிக்கப்பட்டு, 01.03.2016 அன்று இத்திட்டம் தொடங்கிவைக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஆண்டிற்கு ஒருமுறை 30 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் அடிப்படையான முழு உடல் பரிசோதனை செய்யப்படும்.

இத்திட்டம் முதற்கட்டமாக 400 மேம்படுத்தப்பட்ட மற்றும் வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களில், சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வாரமும் வியாழன் மற்றும் வெள்ளிகிழமைகளில் நடைபெறும் முகாம்களில் பொதுமக்கள் கட்டணமில்லாமல் எடை உயரக் குறியீடு (BMI), இரத்த அழுத்தம், இரத்த அணுக்கள், குருதி செம்மை பரிசோதனை, குருதி தடவல் பரிசோதனை, இரத்த வகை பரிசோதனை, இரத்த சர்க்கரை, இரத்த கொழுப்பு, இரத்த கிரியாட்டினின், சிறுநீரில் உப்பு, சிறுநீரில் சர்க்கரை, சிறுநீர்-டெபாசிட்ஸ், அல்டரா சவுண்ட் பரிசோதனை, ஈ.சி.ஜி, எக்ஸ்ரே, சளி பரிசோதனை, கருப்பை வாய் புற்று நோய் பரிசோதனை, மார்பக புற்று நோய் பரிசோதனை, வாய் புற்று நோய் பரிசோதைனை, பார்வை குறைபாடு மற்றும் கண் புரை நோய் பரிசோதனை, தோல் நோய் பரிசோதனை, மருத்துவர் மூலமான பொது உடற்பரிசோதனை ஆகிய 25 விதமான உடல் மற்றும் இரத்த பரிசோதனைகள் செய்யப்படுகிறது.

நீரிழிவு மற்றும் இரத்த அழுத்தம் உள்ளவர்களாக கண்டறியப்பட்ட நபர்களுக்கு, உடனடியாக 30 நாட்களுக்கு தேவையான மருந்து மாத்திரைகள் வழங்கப்படுகின்றன. மேலும் தேவைப்படும் வரை மாதாமாதம் தொடர்ந்து வழங்கப்படும். உயர் சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சை தேவைப்படுவோருக்கு, அரசு மாவட்ட மருத்துவமனைகளிலும், மருத்துவக்கல்லுhரி மருத்துவமனைகளிலும் உள்நோயாளியாக அனுமதித்து தொடர் சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழும் சிகிச்சைளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 1,15,069 நபர்களுக்குமேல் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்திற்கு இதுவரை ரூ.2.43 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பொதுவாக நோயாளிகள் மட்டுமே மருத்துவமனையை தேடி வந்த நிலையை மாற்றி ஆரோக்கியமான நபர்களை மருத்துவமனைக்கு வரவழைத்து அவர்களுக்கு கட்டணமில்லாமல் பரிசோதனை மேற்கொண்டு பொது மக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் உன்னதமான திட்டம் தான் அம்மா ஆரோக்கிய திட்டம். இத்திட்டத்தினை சீரும் சிறப்புமாக செயல்படுத்தி நோய்களை முன்னரே கண்டு அறிவதன் மூலம் நோயாளிகளுக்கு ஏற்படும் சிரமங்கள் குறைவதோடு மட்டுமல்லாமல், தேவையற்ற பொருட்செலவும் பெருமளவில் குறைக்கப்படும். எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இந்த உன்னதமான திட்டத்தை செயல்படுத்துவதில் மேலும் அர்பணிப்பு உணர்வோடு செயல்பட்டு அரசுக்கு நற்பெயரை ஈட்டி தர மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார்.

இக்கூட்டத்தில் மக்கள் நல்வாழ்வு (ம) குடும்ப நலத் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ.இராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., மாநில நலவாழ்வு சங்க குழும இயக்குநர் &தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் திரு.தாரேஸ் அகமது, இ.ஆ.ப., பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துகள் துறை இயக்குநர் டாக்டர். க.குழந்தைசாமி மற்றும் உயரதிகாரிகள் பங்கேற்றனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**